**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | DVC. 13/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | ம.சா.1 |
| Name : | திருமதி. கௌசல்யா |
| Father Name : | திரு. அருண்ராஜ் |
| Village : | சித்தளி |
| Taluk : | குன்னம் |
| Age : | 26/ 2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் ஆஜர். 1 எதிர்மனுதாரர் ஆஜர் இல்லை. அவர்களுக்காக 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்படுகிறது.**

**எதிர் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இணையதளத்தில் மூலம் எடுக்கப்பட்ட எனது குடும்ப அட்டை நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் எதிர் மனுதாரரின் பெயரை நீக்கி விட்டு புதிய குடும்ப அட்டையை நான் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. பஅந்த புதிய குடும்ப அட்டையின்படி நான் மகளிர் உரிமைத் தொகை ரூபாய் 1000 பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. இல்லம் தேடி கல்வி திட்டத்தின்படி மாணவர்களுக்கு வகுப்பு எடுத்துள்ளேன் என்றால் லாக்டவுன் காலத்தில் எடுத்தேன். அதற்கு ஊதியம் எவ்வளவு என்றால் மாதம் ஆயிரம் ரூபாய். இப்பொழுதும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் இல்லம் தேடி கல்வி திட்டத்தின்படி மாணவர்களுக்கு வகுப்பு எடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. கணவரால் கைவிடபட்டோர் சான்றிதழை பெற்று அரசாங்க வேலைக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்பொழுது தனியார் கல்வி நிறுவனத்தில் பணி புரிந்து மாதம் ரூபாய் பதினாராயிரம் ஊதியம் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. எனது முதன்மை வாக்குமூலத்தில் கூறிய சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால்

சரியல்ல. என்னால் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட சீர்வரிசைப் பட்டியலின் படி எதிர் மனுதாரர்களிடம் நகை உள்ளது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரரரையும் அவருடைய குடும்பத்தையும் பழி வாங்க வேண்டும் என்ற நோக்கில் தான் குடும்பத்தில் உள்ள அனைவரின் பெயரையும் சேர்த்து மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுவில் நான் கேட்ட பரிகாரம் சட்டபப்படி எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.